**My No**:-NP/09/FRM/2007 **Date**:- 25/04/2007

## மாகாணத் திறைசேரி சுற்றுநிருபம் - PT/10/2007

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடமாகாணம்.

### அரச அலுவலர்கள் பெற்றுக் கொள்ளாத விடுமுறைக்களுக்கான ஊக்குவிப்புப் படி செலுத்துதல்.

பொதுநிர்வாக அமைச்சின் **2/2005, 10/2006, 10/2006(1)**ம் சுற்றுநிருபங்களின் மீதும் மாகாணத் திறைசேரியின் **PT/09/2007** சுற்றிநிருபத்தின் மீதும் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

மேற்படி ஊக்குவிப்புப் படி கொடுப்பனவு சம்பந்தமான சம்பளப் பட்டியல் தயாரிக்கும் போது பல சந்தேகங்கள் எழுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அது தயாரிக்கும்போது பின்வரும் முக்கிய விடயங்களை கவனத்தில் கொள்ளவும்.

1. 2006ம் ஆண்டில் இளைப்பாறும் உத்தியோகத்தருக்கு 2006ம் வருடத்திற்கான கொடுப்பனவு பொதுநிர்வாக அமைச்சின் சுற்றுநிருபம் 02.:.2005ன் பிரகாரம் மேற்கொள்ள வேண்டும். அதாவது ஓய்வு விடுமுறையின் அடிப்படையிலேயே கொடுப்பனவு கணிக்கப்படல் வேண்டும்.

   அதேபோன்று அவர்களின் 2005ம் வருட ஓய்வு விடுமுறை மீதியாக இருப்பின் அவ்வருடத்திற்கும் இக்கொடுப்பனவு 02.:.2005ன் பிரகாரம் கணிப்பீடு செய்து வழங்க முடியும். இக் கணிப்பீடு செய்வதற்கு 07 நாட்கள் கட்டாய விடுமுறை கணக்கில் எடுத்தல் ஆகாது. ஆகக் குறைந்தது 05 நாட்கள் என்ற விடயமும் இவர்களைப் பொறுத்தவரையில் பொருந்தாது.

2. 1.1.2005 ற்கும் 31.12.2005 ற்கும் இடைப்பட்ட காலத்தில் இளைப்பாறியவர்கள் விடயத்திலும் 02.:.2005ன் பிரகாரமே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. பொது நிர்வாக சுற்றுநிருபம் 10/2006 ன் பிரகாரம் கொடுப்பனவு வழங்கப்படும் உத்தியோகத்தர்கள் ஆகக் குறைந்தது 05 நாட்கள் விடுமுறையை மீதப்படுத்தியிருத்தல் வேண்டும்.

4. கொடுப்பனவானது குறிப்பிட்ட வருடத்தின் மார்கழி மாதச் சம்பளத்தை அடிப்படையாக் கொண்டு தயாரிக்கப்படல் வேண்டும்.

5. இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்டவர்கள் ஊக்குவிப்புப் படிக்கு உரித்துடையவரல்லர்.

6. குறிப்பிட்ட காலப்பகுதியில் பதில் விடுமுறை (Lieu Leave) பெற்றிருந்தால் அக் குறிப்பிட்ட நாட்களின் எண்ணிக்கையால் கொடுப்பனவு குறைக்கப்படுதல் வேண்டும்.

7. ஏழு நாட்கள் கட்டாய லீவு பெறாதவர்களின் விடயத்தில் மிகுதியாக உள்ள விடுமுறை நாட்களில் இருந்து ஏழு நாட்கள் குறைத்துக் கணிப்பிடுதல் வேண்டும்.

8. ஆசிரியர்கள் ஏழு நாட்கள் விடுமுறைக்கு தகுதியற்றவர்கள். எனவே அவர்களின் மிகுதியாக உள்ள விடுமுறை நாட்களில் இருந்து ஏழு நாட்கள் **<u>கழிக்க வேண்டிய அவசியம் இல்லை.</u>**

9. **<u>நிரந்தர ஓய்வுதியம் பெறத் தகுதி உடைய அரசாங்க உத்தியோகத்தவர்கள் மட்டும்</u>** இவ் ஊக்குவிப்புப் படியைப் பெற தகுதி உடையவர்கள். இளைப்பாறி மீள் நியமனம் பெற்றவர்கள் ∴ ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுபவர்கள் இவ் ஊக்குவிப்புப் படியைப் பெற தகுதியற்றவர்கள்.

10. கொடுப்பனவு மேற்கொள்ளும் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் இளைப்பாறியவர்களின் விடயத்தில் அக் காலப்பகுதிக்கான கொடுப்பனவு **10/2006(I)**ம் இலக்க சுற்றுநிருபத்தின் இணைப்பு **I** ன் பிரகாரம் மேற்கொள்ளலாம்.

11. முனைப்பான சேவைக்காலத்திற்கு (Active Service) மட்டுமே இக்கொடுப்பனவு கணிக்கப்படல் வேண்டும். பின்வரும் விடுமுறைகள் முனைப்பான சேவைக்காலமாக கொள்ளப்படமாட்டாது.

இளைப்பாறுவதற்கு முன் பெறும் விசேடவிடுமுறை

11.2 விசேட அனுமதி பெற்ற விடுமுறை

11.3 மகப்பேற்று விடுமுறை

11.4 வெளிநாடு செல்வதற்காகப் பெற்ற விடுமுறை

14. ஒரு முழுமாதமே முனைப்பான சேவைக்காலத்தை (Active Service) கணிக்கும் போது கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

15. குறிப்பிட்ட வருடத்தினுள் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் அவ்வருடம் முடிவதற்குள் **09** மாதம் பூ ர்த்தி செய்திருந்தால் மட்டும் ஊக்குவிப்புப் படி பெறத் தகுதியுடையவர்கள். அப்படி பூ ர்த்தி செய்யும் சந்தர்ப்பத்தில் **10/2006(I)** இணைப்பு **I** ன் பிரகாரம் கணிப்பீடு செய்து கொடுப்பனவு வழங்கலாம்.

உதாரணமாக **07**ம் மாதத்தில் ஒருதிகதியில் ஒரு உத்தியோகத்தரின் சேவைக்காலம் ஒன்பது மாதங்கள் பூ ர்தியாகுமானால் எஞ்சியிருப்பது **05** மாதங்களே. எனவே பட்டியலில் **05** வது மாதத்திற்கு தகுதியான நாட்கள் 12 1/2 நாட்கள் ஆகும். வேறு மேலதிகமாக (ஏழு நாட்கள் தவிர) விடுமுறை ஏதும் பெறாதிருப்பின் 12 1/2 நாட்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ள முடியும்.

**16.** தனது கடமை தவிர்ந்த வேறு கடமைகளுக்காக தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இக்கொடுப்பனவிற்கு அருகதையற்றவர்கள்.

எனவே மேற்கூறப்பட்ட பொது நிர்வாக சுற்றுநிருபங்களில் கூறப்பட்ட ஏனைய விடயங்களையும் கருத்தில் கொண்டு கொடுப்பனவுப் பட்டியல் தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

சி.ரங்கராஜா
பிரதம செயலாளர்.

பிரதி:-

1. செயலாளர், மாகாணப் பொதுநிர்வாக அமைச்சு – வமா
2. பிரதிப் பிரதம செயலாளர் - உள்ளகக் கணக்காய்வு – வமா
3. கணக்காய்வாளர் நாயகம்

} தகவலுக்காக